<u>சாட்சிகளின் வாக்குமூலம்</u>
பாகம் III சுற்றறிக்கை உத்தரவு 2 (I) உ.வி.மு.ச.
பிரிவு 1 மற்றும் உ.வி.மு.ச.

**E.A.No.12/2013 in E.P.No. 9/2012**

<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்</u>
<u>வாக்குமூலம் – ம.சா–3</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கிருஷ்ணசாமி | மதம் | : | |
| த/க/பெ. | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலுகா | : | பல்லடம் | மாவட்டம் | : | திருப்பூர் |

1987ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு 10ன்படி சாட்சி அழைக்கப்பட்டு அங்கனமே உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு 2025 ஆண்டு அக்டோபர் மாதம் 6ம் நாள் சாட்சியம்.

---

**<u>முதல் விசாரணை</u>**

நான் இவ்வழக்கில் 3ம் தரப்பினர் ஆவேன். என்னுடைய முதல் விசாரணையை நிரூபண வாக்கு மூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும், படித்துப்பார்த்து தான் கையெழுத்து போட்டேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். கீழ்க்கண்ட ஆவணங்கள்

1. எனது ஆதார் அடையாள அட்டையின் சரிபார்க்கப்பட்ட நகல்.
2. 03.01.1991 தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட உயில் ஆவணத்தின் புகைப்பட நகல் (3 புத்தகம், ஆவண எண்.2/1991)

ஆகியவற்றை மனுதாரர் தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன். **(2 வது ஆவணம் நகல் என்றும், இந்திய சாட்சிய சட்டத்தின் சட்டப்பிரிவுகள் 63 மற்றும் 65 –ன் படி உயிலின் அசலை மட்டும் தான் குறியீடு செய்ய முடியும் நகலை குறியீடு செய்ய முடியாது என்று 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் ஆட்சேபனை செய்யப்பட்டது. ஏற்கனவே மனுதாரர் தரப்பில் மேற்படி உயிலின் சான்றிட்ட நகல் குறியீடு**

**செய்யப்பட்டுள்ளது. எனவே, தற்போது சாட்சியின் மூலம் உயிலின் நகலானது குறியீடு செய்யவும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் ஆட்சேபனை செய்யப்பட்டது**.) மேற்படி 2வது ஆவணம் மேற்படி ஆட்சேபனைகளுடன், ஆவணங்கள் முறையே **ம.சா.ஆ.11 மற்றும் ம.சா.ஆ.12** ஆவணங்கள் ஆக குறியீடு செய்யப்படுகின்றன.

ம.சா.ஆ.12 உயிலில் காணப்படும் கையெழுத்துகளில் எனது கையெழுத்து முதல் தாளில் 2வது பக்கத்தில் இன்னார் என்று நிரூபித்தவர்கள் என்ற இடத்தில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையது தான். மேலும் ஆவணத்தின் கடைசி பக்கத்தில் உள்ள சாட்சிகள் கையெழுத்துகளில் உள்ள 3வது கையெழுத்தும் என்னுடையது தான். மேற்படி கையெழுத்துகள் முறையே **ம.சா.ஆ.13 மற்றும் ம.சா.ஆ.14** ஆவணங்கள் ஆக குறியீடு செய்யப்படுகின்றன.

ம.சா.ஆ.12 உயிலில் காணப்படும் கையெழுத்துகளில் மேற்படி உயிலை எழுதி வைத்த சுப்பிரமணியன் என்பவரின் கையெழுத்து 2வது தாளில் சொத்து விவரம் குறிப்பிட்டுள்ள பக்கத்தின் கடைசியில் உள்ள கையெழுத்து சுப்பிரமணியன் கையெழுத்து தான். மேலும் முதல் தாளில் 2வது பக்கத்திலும், முதல் மற்றும் கடைசி பக்கத்தில் உள்ள சுப்பிரமணியன் என்ற கையெழுத்துகளும், சுப்பிரமணியனின் கையெழுத்துகள் தான். மேற்படி சுப்பிரமணியனின் கையெழுத்துகள் **ம.சா.ஆ.15 முதல் ம.சா.ஆ.18** ஆக குறியீடு செய்யப்படுகின்றன.

<u>**குறுக்கு விசாரணை**</u>

1. எனக்கு நீதிமன்றத்தில் இருந்து சாட்சியம் அளிப்பதற்கு அழைப்பாணை எதுவும் வரவில்லை என்றால் சரிதான். நான் எனது நிரூபண வாக்குமூலத்தில் எங்கு வைத்து கையெழுத்து போட்டேன் என்றால் வழக்கறிஞர் முன்னிலையில் போட்டேன். எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லி உள்ள சங்கதிகள் தட்டச்சு செய்திருந்ததை நான் படித்து பார்த்து கையெழுத்து போட்டேன் என்றால் சரிதான். நான் கையெழுத்து போடுவதற்கு முன்பாகவே அதில் தட்டச்சு செய்யப்பட்டு இருந்தது அதைத்தான் நான் படித்து பார்த்தேனா என்றால் ஆம்.

2. நிரூபண வாக்குமூலத்தில் நான் போட்டுள்ள கையொப்பங்களை யார் சொல்லி போட்டேன் என்றால் வழக்கறிஞர் கையெழுத்து போட வேண்டிய இடங்களை சொன்னார் நான் போட்டேன். சுப்ரமணியத்திற்கும் விஜயாவிற்கும் விவாகரத்தான ஆவணங்களை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. விஜயாவை சுப்ரமணியம் விவாகரத்து செய்தாரா என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். விஜயா தற்போதும் உயிரோடு உள்ளார் என்றால் சரிதான். நான் பிஎஸ்சி வரை படித்துள்ளேன்.

3. சுப்ரமணியத்திற்கும் விஜயாவிற்கும் விவாகரத்து ஆனது எனக்கு தெரியாத வகையில் விஜயா தான் சுப்ரமணியத்தின் மனைவி என்றால் சரிதான். சுப்ரமணியத்திற்கு காசநோய் இருந்தது என்றால் சரியல்ல. சுப்பிரமணியம் எனது நண்பரா என்றால் நண்பர் மற்றும் எனது உறவினர் ஆவார். எனக்கும் சுப்ரமணியத்திற்கும் நெருங்கிய பழக்கம் இருந்தது. சுப்ரமணியம் எனக்கு பழக்கம் என்று சொல்வது பொய்யானது என்றும், சுப்ரமணியத்திற்கு காசநோய் இருந்தது உண்மை என்றும் சொன்னால் சரியல்ல.

4. சுப்பிரமணியத்திற்கு உயில் எழுதும் சமயத்தில் உடல்நிலை சரியில்லை என்று உயிலிலேயே கண்டு எழுதப்பட்டுள்ளது என்றும், நான் சுப்பிரமணியம் நல்ல உடல் நிலையில் இருந்தார் என்று எனது நிரூபணம் வாக்குமூலத்தில் பொய்யாக சொல்லி உள்ளேன் என்றால் சரியல்ல. எனது முதல் விசாரணையில் என்னிடம் காட்டப்பட்ட உயிலின் நகலில் சுப்பிரமணியம் எங்கெங்கு கையெழுத்து போட்டுள்ளார் என்று பார்த்து தான் அடையாளம் காண்பித்தேன் என்றால் சரிதான்.

5. நான் மற்றும் சுப்ரமணியம் ஆகியோர் உயிலில் எங்கெங்கு கையெழுத்து போட்டோம் என்று நான் சொல்வது எனது அறிவிற்கு எட்டிய அளவில் கிடையாது என்றால் சரியல்ல. நான் கையெழுத்து போடுவதை பார்த்தேன். சுப்பிரமணியன் உயில் எழுதும் போது தனது பெயரில் என்னென்ன ஆவணங்கள் உள்ளது என்பதை காண்பித்தாரா என்றால் இல்லை. உயில் எழுதும் பொழுது வசந்தி அங்கு வந்தாரா என்றால் இல்லை. நான் உயில் எழுதும்போது தற்போது எனது நிரூபன வாக்குமூலத்தில் சொல்லி உள்ள முகவரியை தான் கொடுத்தேனா என்றால் இல்லை. அந்த சமயத்தில் நான் வேறு முகவரியில் இருந்தேன். அந்த சமயத்தில் நான் வேறு முகவரியில் இருந்தேன் என்பதற்கு ஆவணம் எதுவும் உள்ளதா என்றால் இல்லை.

6. நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.12 உயிலின் நகலானது அசல் உயிலில் இருந்து எடுக்கப்பட்ட ஜெராக்ஸ் நகலா என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். சுப்பிரமணியன் எத்தனை கையெழுத்து போட்டார் என்று உயிலின் நகலை பார்த்து தான் தெரிந்து கொண்டேன் என்றால் அப்பொழுது கையெழுத்து போட்டார் தற்போது பார்த்து தெரிந்து கொண்டேன். ம.சா.ஆ.12 ஆவணத்தில் உள்ள கையெழுத்துக்கள் சுப்பிரமணியத்தின் கையெழுத்து தான் என்பதற்கு வேறு ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

7. ம.சா.ஆ.12 ஆவணத்தில் உள்ள கையெழுத்துக்கள் சுப்பிரமணியத்தின் கையெழுத்து தான் என்று என்னால் உறுதியாக சொல்ல முடியாது என்றால் சரியல்ல. சுப்ரமணியன் கையெழுத்து போட்ட பின்னர் நாங்கள் போட்டோம். சுப்ரமணியம் அசல் உயிலில் தான் கையெழுத்து போட்டார். அசல் உயிலை அதன் பின்னர் நான் பார்த்தேனா என்றால் கையெழுத்து போடும்போது பார்த்தேன், அதன் பின்னர் நான் பார்க்கவில்லை.

8. அசல் உயிலை என்னிடம் காட்டினால் தான் எந்தெந்த கையெழுத்தை சுப்பிரமணியம் போட்டார் என்றும், நான் எங்கெங்கு கையெழுத்து போட்டேன் என்று பார்த்து என்னால் சரியாக அடையாளம் காட்ட முடியும் என்றும், நகலை வைத்து என்னால் அடையாளம் காட்ட முடியாது என்றும் சொன்னால் சரியல்ல. உயிலின் நகலை நான் தாக்கல் செய்வதற்கு எனக்கு எந்த அருகதையும் கிடையாது என்றால் சரியல்ல. உயிலில் நானோ அல்லது மற்ற சாட்சிகளோ கைரேகை எதுவும் வைத்தோமா என்றால் இல்லை. பதிவாளர் அலுவலகத்தில் பதிவேட்டில் மட்டும் வைத்தோம்.

9. உயிலில் இன்னார் என்று நிரூபித்தவர் என்ற இடத்தில் நான் கையெழுத்து போடும்போது முகவரி, கதவு எண் ஆகியவற்றை கொடுத்து தான் போட்டேனா என்றால் ஆம். உயிரில் சாட்சி கையெழுத்து போட்டுள்ள மற்ற நபர்களான ஆறுமுகம், கே.சுப்பிரமணி, மற்றும் கஸ்தூரி சாமி ஆகியோர்களுக்கு கையெழுத்துக்கள் அவர்களுடையதுதான் என்பதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. சாட்சிகளின் கையெழுத்துக்களை அடையாளம் காட்டுவதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யாமல், அவர்களுடைய கையெழுத்துக்கள் தான் என்று சாட்சியம் அளிக்க எனக்கு எந்த அருகதையும் கிடையாது என்றால் சரியல்ல.

10. பதிவாளர் அலுவலகத்திற்கு காலை 10 முதல் 10:30 மணிக்குள் சென்றோம். பத்திர எழுத்தர் பத்திரம் எழுதி எப்போது கொடுத்தார் என்றால் 10 மணி அளவில் கொடுத்துவிட்டார். எத்தனை மணிக்கு பத்திரப்பதிவாளர் அலுவலகத்தில் இருந்து வெளியே வந்தோம் என்றால் மதியம் 1 மணி இருக்கும். பத்திர எழுத்தருக்கு யார் பணம் கொடுத்தார் என்றால் சுப்ரமணியம் தான் கொடுத்தார். நான் சுப்ரமணியம் பணம் கொடுத்ததை பார்த்தேனா என்றால் இல்லை. உயில் ஆவணத்தில் விஜயாவை நான் விவாகரத்து செய்து விட்டேன் என்று ஏதேனும் குறிப்பு உள்ளதா என்றால் எனக்கு நினைவில் இல்லை.

11. நாங்கள் செல்லும்போது பத்திர எழுத்தர் உயிலை தயார் செய்து வைத்திருந்தாரா என்றால் நாங்கள் சென்ற பின்னர் தான் தயார் செய்தார். உயிலை தயார் செய்தவர் யார் என்று உயலில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது. உயிலை வடுகபாளையம் பழைய மணியக்காரர் தயார் செய்தார். எனது நிரூபன வாக்குமூலத்தில் உயிலை தயார் செய்தவர் யார் என்றோ, எங்கு வைத்து தயார் செய்யப்பட்டது என்றோ குறிப்பிட்டு சொல்லி உள்ளேனா என்றால் இல்லை.

12. உயில் ஆவணத்தில் உயில் சங்கதிகள் முடியும் பகுதிக்கும், சொத்து விவரத்திற்கும் இடைப்பட்ட பகுதியில் சுப்பிரமணியன் கையெழுத்து போட்டுள்ளாரா என்றால் போட்டுள்ளார். உயிலில் சுப்பிரமணியத்திற்கு சொத்து எந்த வகையில் வந்தது என்று சொல்லி உள்ளாரா என்றால் எனக்கு நினைவில் இல்லை. உயிலில் சுப்பிரமணியத்திற்கு எத்தனை ஏக்கர், எத்தனை சென்ட் பாத்தியப்பட்டது என்று குறிப்பிட்டு எழுதப்பட்டுள்ளதா என்றால் எழுதப்பட்டுள்ளது. உயிலில் சுப்பிரமணியத்தின் ஊர், வீதியில் பெயர் ஆகியவை செல்லப்பட்டுள்ளதா என்றால் சொல்லப்பட்டுள்ளது.

13. உயிலை பற்றி வசந்திக்கு எந்த தேதியில் தெரியப்படுத்தினேன் என்று குறிப்பிட்டு எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லி உள்ளேனா என்றால் இல்லை. வசந்தி சின்னசாமிக்கு சொத்தினை விற்றதாக என்னிடம் சொன்னாரா என்றால் இல்லை. உயிலை பற்றி எனக்கு எந்த விவரமும் தெரியாது என்றும், நான் உயில் பற்றிய சாட்சியம் அளிக்க எந்த தகுதியும் எனக்கு கிடையாது என்றும் சொன்னால் சரியல்ல. நான் பத்திரப்பதிவாளர் அலுவலகத்திற்கு செல்லவே இல்லை என்றும்,

எனது முன்னிலையில் உயில் தயார் செய்யப்படவே இல்லை என்றும், சொன்னால் சரியல்ல.

14. நான் முதல் விசாரணையிலும், குறுக்கு விசாரணை சாட்சியத்திலும் முன்னுக்குப் பின் முரணாக உயிலை பற்றி சாட்சியம் அளித்துள்ளதால் எனது சாட்சியம் ஏற்கத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

V KALIDASAN Digitally signed by V KALIDASAN
Date: 2025.10.06 18:15:32 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பல்லடம்.